செட்டிநாடு வித்யாஸ்ரம் 41ம் ஆண்டு விளையாட்டு விழா

விளையாட்டு தனிமனித ஒழுக்கத்தை வளர்க்கும்; நற்பண்புகளைப் பெருக்கும்

சுங்கத்துறை ஆணையர் பிரசாத் அறிவுறுத்தல்

சென்னை, ஆக. 7–

செட்டிநாடு வித்யாஸ்ரம் 41ம் ஆண்டு விளையாட்டு விழா ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கில் சிறப்பாக கொண்டாடப்பட்டது.

இறை வணக்கத்துடன் பள்ளியின் தாளாளர் குமாரராணி மீனா முத்தையாவின் நல்லாசியுடனும் தொடங்கியது. தேசிய கொடியுடன், பள்ளிக் கொடியையும் ஏற்றிய பள்ளியின் முதல்வர் அமுதலஷ்மி ‘மாணவர்கள் விளையாட்டுத் திடலில் எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியும் அவர்களின் தன்னம்பிக்கையும், முயற்சியையும் புகழின் உச்சத்திற்கு கொண்டுச் செல்லும் என்றார். அவரது வரவேற்புரை மாணவர்களுக்கு உத்வேகத்தை தந்தது.

சிறப்பு விருந்தினர் பிரசாத் சென்னை, சுங்கத்துறை ஆணையர், மனித வாழ்க்கையில் விளையாட்டின் முக்கியத்துவத்தை பற்றி கூறுகையில், விளையாட்டு தனி மனித ஒழுக்கத்தையும், கூட்டு முயற்சியையும், இன்னும் பல நற்பண்புகளையும் வளர்க்கும் என்றார். விளையாட்டு ஒவ்வொரு மனிதனையும் வெற்றிக்கு அழைத்துச் செல்லும் நன் மருந்து என்று எடுத்துரைத்து விழாவை துவக்கி வைத்தார்.

புறாக்களை பறக்க விட்டார்

அவர் பறக்கவிட்ட புறாக்கள் விழாவுக்கு வாழ்த்து இசைப்பது போல் வானில் அழகாக சிறகடித்து பறந்தன. பின் அவர் மாணவர்களின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டார்.

தேசிய மற்றும் மாநில அளவில் பல்வேறு விளையாட்டுகளில் சிறந்து விளங்கும் வீராங்கனைகளும், வீரர்களும் ஒளிவிளக்கைத் தாங்கிச் சென்றது கண்கொள்ளாக் காட்சியாக அமைந்தது.

தொடக்கப்பள்ளி மாணவ, மாணவிகள் சுடர் போராளிகள், இளம் போர் வீரர்கள், நீச்சல் வீரர்கள் ஆகியோரைப் பற்றி அழகான அங்க அசைவுகளின் மூலமும், கருவிகள் கொண்டும் நடனமாக நடத்தியது கண்களுக்கு விருந்தளித்தது. பல்வகை நடனங்களும் 200க்கும் மேற்பட்ட மாணவர்களின் யோகா நிகழ்ச்சியும் பிரமிப்பூட்டும் காட்சியாக இருந்தது.

வெற்றி பெற்றவர்களுக்கு பதக்கங்கள், கோப்கைள்

மாணவர்களின் வீரதீர விளையாட்டுப் போட்டிகளின் இறுதிச் சுற்றுகள் சுற்றி நின்ற சகமாணவர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்களின் கைத்தட்டல் ஆரவாரத்தோடு சிறப்பாக இருந்தது. இறுதிச்சுற்றுகள் காண்போரை நாற்காலியின் விளிம்பில் உட்கார வைத்தது. வெற்றிபெற்ற மாணவர்களுக்குப் பதக்கங்களும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. வெற்றிப் பெற்ற குழுவைச் சேர்ந்த மாணவர்கள் வெற்றிக் கோப்பையை தட்டிச் சென்றனர். இறுதியில் பள்ளியின் விளையாட்டுத் துறை மாணவத் தலைவன் நன்றி கூறினார்.

செங்கல்பட்டில் சிறுபான்மையின மக்களுக்கு நலத்திட்ட உதவி: அமைச்சர் ஷாஜகான் வழங்கினர்

செங்கல்பட்டு, ஆக.7–

செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியர் அலுவலக குறைதீர் கூட்டரங்கில் நடைபெற்ற சிறுபான்மையினர் மக்களுக்காக செயல்படுத்தப்பட்டு வரும் நலத்திட்டங்கள் குறித்த ஆய்வு கூட்டத்தில் சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் ஏ.எம். ஷாஜகான் நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

இக்கூட்டத்தில் மனிதவள மேலாண்மை துறை அமைச்சர் த.சரத்குமார் மற்றும் கலெக்டர் வீரப்பன் கலந்து கொண்டு, சிறுபான்மையினர் சமூகத்தை சேர்ந்த முஸ்லீம்கள், கிறித்துவர்கள், ஜெயின்ஸ் மற்றும் புத்த மதத்தை சேர்ந்த சிறுபான்மையின மக்கள் தொழில் தொடங்க ஏதுவாக மானியத்துடன் கூடிய கடன் உதவிகளை வழங்கினார்கள்.

இந்நிகழ்வில் உலாமாக்களுக்கான இருசக்கரம் வழங்கும் திட்டத்தின் கீழ் தலா ரூ.50 ஆயிரத்திற்கான இருசக்கர மானியம் 4 பயனாளிகளுக்கு வழங்கப்பட்டது. செங்கல்பட்டு மாவட்ட முஸ்லிம் மகளிர் உதவும் சங்கம்–1 ன் மூலமாக 2025–26 ஆம் ஆண்டிற்கான 213 பயனாளிகளுக்கு ரூ.26 லட்சம் மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகளும்,

தொடர்ந்து குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறையின் சார்பில் மாவட்ட தொழில் மையத்தின் மூலமாக 15 நபர்களுக்கு மானியத்துடன் கூடிய கடனுதவியும், கூட்டுறவு துறையின் வாயிலாக புதிதாக தொழில் தொடங்க ஏதுவாக தலா ரூ.50,000 என ஏழு நபர்களுக்கு ரூ.3.5 இலட்சம் மதிப்பீட்டில் கடனுதவி வழங்கப்பட்டது.

மாவட்ட வழங்கல் துறையின் வாயிலாக குடும்ப அட்டை வேண்டி விண்ணப்பித்திருந்த செங்கல்பட்டு மாவட்டத்திற்கு உட்பட்ட 20 நபர்களுக்கு இவ்வாய்வு கூட்டத்தில் அமைச்சர் குடும்ப அட்டையை வழங்கினார்.



தொடர்ந்து, சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் பேசுகையில்,

இத்துறையில் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள் குறித்து தற்போதைய நிலைப்பாட்டினை கேட்டறிந்து, சிறுபான்மையினர் மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் விதமாக மேலும் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தும் வண்ணம் முதலமைச்சர் கவனத்திற்கு கொண்டு சென்று சிறுபான்மையினர் மக்களின் நலன் பேணப்படும் என்று தெரிவித்தார்.

இத்துறையின் வாயிலாகவும், இவ்வாய்வு கூட்டத்திலும் வரப்பெற்ற மனுக்களுக்கு உரிய தீர்வு காணப்படும் என்றும், ஏதேனும் கோரிக்கைகள் இருந்தால் அவற்றை மனுவாக என்னிடம் வழங்குங்கள் அம்மனுக்களின் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு உரிய தீர்வு காணப்படும் என்று தெரிவித்தார். இந்நிகழ்வில், சட்டமன்ற உறுப்பினர்கள் சௌ.தியாகராஜன், பா.விஜயராஜ், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர் ஜே.சரவணன் மற்றும் செங்கல்பட்டு மாவட்டம் முஸ்லிம் மகளிர் உதவும் சங்கம்1 செயலாளர் முகமது பெய்க் மற்றும் சம்பந்தப்பட்ட அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

விவ்ரிடி அசெட் மேனேஜ்மெண்ட் பிரைவேட் லிமிடெட்

(முன்னர் விவ்ரிடி பண்ட்ஸ் பிரைவேட் லிமிடெட் என்று அழைக்கப்பட்டது)

(CIN : U66300TN2003PTC052025)

பதிவு அலுவலகம் : பிரஸ்டீஜ் ஐக்ரியா மெட்ரோபாலிடன், எண்.200/1-8, 8வது தளம், பிளாக்-1, அண்ணா சாலை, சென்னை 600002.

ஜூன் 30, 2026 அன்று முடிவடைந்த காலாண்டுக்கான தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகள்

[செபி (பட்டியல் கடமைகள் மற்றும் வெளிப்படுத்துதல் சம்பந்தமான நிபந்தனைகள்), விதிகள் 2015ன் விதி 52(8) மற்றும் 52(4)]

(₹ லட்சங்களில்)

வ. எண்	விவரங்கள்	ஜூன் 30, 2026ல் முடிவடைந்த காலாண்டு	ஜூன் 30, 2025ல் முடிவடைந்த காலாண்டு	மார்ச் 31, 2026ல் முடிவடைந்த ஆண்டு
		(தணிக்கை செய்யப்படாதது)	(தணிக்கை செய்யப்படாதது)	(தணிக்கை செய்யப்பட்டது)
1.	செயல்பாடுகள் மூலம் மொத்த வருமானம்	1,480.74	1,888.94	7,780.89
2.	காலத்திற்கான நிகர லாபம் / (நஷ்டம்) (வரி, தனிப்பட்ட மற்றும் / அல்லது அசாதாரண வகைகளுக்கு முன்)	(274.91)	124.84	867.59
3.	வரிக்கு முன் காலத்திற்கான நிகர லாபம் / (நஷ்டம்) (தனிப்பட்ட மற்றும் / அல்லது அசாதாரண வகைகளுக்கு பின்)	(274.91)	124.84	867.59
4.	வரிக்கு பின் காலத்திற்கான நிகர லாபம் / (நஷ்டம்) (தனிப்பட்ட மற்றும் / அல்லது அசாதாரண வகைகளுக்கு பின்)	(225.62)	92.38	724.79
5.	காலத்திற்கான மொத்த விரிவான வருமானம் (காலத்திற்கான லாபம் / (நஷ்டம்) (வரிக்கு பின்) மற்றும் இதர விரிவான வருமானம் (வரிக்கு பின்) உள்ளடக்கியது)	(229.36)	87.14	727.01
6.	செலுத்தப்பட்ட சமபங்கு மூலதனம்	8.58	2,106.16	2,533.11
7.	நிலுவையில் உள்ள கட்டாயமாக மாற்றக்கூடிய முன்னுரிமை பங்குகள்	-	992.95	992.95
8.	ரிசர்வ்கள் (மறுமதிப்பீடு ரிசர்வ்கள் நீங்கலாக)	10,847.57	(2,569.76)	(2,403.03)
9.	பங்கு பிரீமியம் கணக்கு	8,688.55	17,237.70	18,483.76
10.	நிகர மதிப்பு	19,544.69	17,767.05	19,606.79
11.	செலுத்தப்பட்ட கடன் மூலதனம் / கடன் நிலுவை	1,406.36	3,090.15	1,914.94
12.	நிலுவையிலுள்ள மீட்டெடுக்கக் கூடிய முன்னுரிமை பங்குகள்	NA	NA	NA
13.	கடன் பங்கு விகிதம்	0.07	0.17	0.10
14.	ஒரு பங்கு சம்பாத்தியம் (ஒன்று ரூ.10/-) (தொடரும் மற்றும் கைவிடப்பட்ட செயல்பாடுகள்) 1. அடிப்படை 2. டைலூட்டட்	 (262.99) (262.99)	 107.68 107.68	 844.84 844.84
15.	மீட்கக்கூடிய மூலதன ஒதுக்கீடு	NA	NA	NA
16.	மீட்கக்கூடிய கடன் பத்திர ஒதுக்கீடு	NA	NA	NA
17.	கடன் சேவை கவரேஜ் விகிதம்	(0.28)	0.81	0.65
18.	வட்டி சேவை கவரேஜ் விகிதம்	(3.93)	2.81	4.41

குறிப்பு :

1. மேற்கண்ட நிதிநிலை முடிவுகள், 2015ம் வருடத்தைய செக்யூரிட்டிஸ் அண்டு எக்சேஞ்சு போர்டு ஆஃப் இந்தியா (பட்டியல் கடமைகள் மற்றும் வெளிப்படுத்துதல் சம்பந்தமான நிபந்தனைகள்) விதிகளின், விதி 52ன் கீழ் ஸ்டாக் எக்சேஞ்சுகளுக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ள காலாண்டுக்கான நிதிநிலை முடிவுகளின் சுருக்கம் ஆகும். காலாண்டுக்கான நிதிநிலை முடிவுகளின் முழு விவரம் பாம்பே ஸ்டாக் எக்ஸ்சேஞ்சின் இணையதளம் (BSE: www.bseindia.com) மற்றும் கம்பெனியின் இணையதளம் (www.vivritiamc.com) ஆகியவற்றில் கிடைக்கும்.
2. செபி (பட்டியல் கடமைகள் மற்றும் வெளிப்படுத்துதல் சம்பந்தமான நிபந்தனைகள்) விதிகள் 2015, விதி 52(4)ன் தொடர்புடைய தகவல்கள் ஸ்டாக் எக்சேஞ்(பிஎஸ்இ)க்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. அது குறித்து (www.bseindia.com)ல் அணுகலாம்.

விவ்ரிடி அசெட் மேனேஜ்மெண்ட் பிரைவேட் லிமிடெட்டுக்காக
(முன்னர் விவ்ரிடி பண்ட்ஸ் பிரைவேட் லிமிடெட் என்று அழைக்கப்பட்டது)
ஒப்பம்/–
வினீத் சுகுமார்
நிர்வாக இயக்குனர்
DIN: 06848801

இடம் : சென்னை
தேதி : ஆகஸ்ட் 05, 2026

FIVE STAR Business Finance Limited

ஃபைவ்–ஸ்டார் பிசினஸ் ஃபைனான்ஸ் லிமிடெட்

CIN: L65991TN1984PLC010844
பதிவு அலுவலகம்: புதிய எண்.27, பழைய எண்.4, டெய்லர்ஸ் சாலை, கீழ்ப்பாக்கம்,
சென்னை – 600010 Phone: 044 4610 6200
Website: www.fivestargroup.in Email ID: secretary@fivestargroup.in

42வது வருடாந்திர பொதுக் கூட்டம் மற்றும் தொலைதூர மின்னணு வாக்களிப்பு குறித்த அறிவிப்பு

நிறுவனங்கள் சட்டம், 2013–ன் பொருந்தக்கூடிய விதிகள் மற்றும் அதன் கீழ் உருவாக்கப்பட்ட விதிகள், செக்யூரிட்டிஸ் அன்ட் எக்சேஞ்ச் போர்டு ஆப் இந்தியா (பட்டியல் கடமைகள் மற்றும் வெளியீட்டு தேவைகள்) விதிமுறைகள், 2015 மற்றும் கார்ப்பரேட் விவகார அமைச்சகம் (‘‘எம்சிஏ’’) மற்றும் செக்யூரிட்டிஸ் அன்ட் எக்சேஞ்ச் போர்டு ஆப் இந்தியா (‘‘செபி’’) சுற்றறிக்கைகளுக்கு இணங்க வருடாந்திர பொதுக் கூட்ட அறிவிப்பில் கண்டுள்ள அலுவல்கள் குறித்து பரிவர்த்தனை மேற்கொள்ள உறுப்பினர்கள் பொதுவாக ஒரு இடத்தில் நேரடியாக பங்கேற்காமல் **ஃபைவ்–ஸ்டார் பிசினஸ் ஃபைனான்ஸ் லிமிடெட்டின் (‘‘நிறுவனம்’’) உறுப்பினர்களுக்கான 42வது வருடாந்திர பொதுக் கூட்டம் (“AGM”) திங்கட்கிழமை, ஆகஸ்ட் 31, 2026 அன்று காலை 10:00 மணிக்கு** (இந்திய நேரப்படி) காணொளி காட்சி ("VC")/இதர ஆடியோ காட்சி முறையில் ("OAVM") நடைபெறும் என்று இதன்மூலம் அறிவிக்கப்படுகிறது.

செபி மற்றும் எம்சிஏ சுற்றறிக்கைகளுக்கு இணங்க, நிறுவனம்/ டெபாசிட்டரி பங்கேற்பாளர்கள் (“DPs”) அல்லது பங்கு மாற்ற முகவர் கேஃபின் டெக்னாலஜிஸ் லிமிடெட்டில் (RTA) மின்னஞ்சல் முகவரியை பதிவு செய்துள்ள உறுப்பினர்களுக்கு 2025–2026 நிதி ஆண்டுக்கான வருடாந்திர அறிக்கையுடன் வருடாந்திர பொதுக் கூட்ட அறிவிப்பு மின்னணு முறையில் மட்டுமே ஆகஸ்ட் 06, 2026 வியாழக்கிழமை அன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அதன்படி, இதுவரை தங்கள் மின்னஞ்சல் முகவரியை பதிவு செய்யாத அல்லது புதுப்பிக்காத பங்குதாரர்கள் தங்கள் மின்னஞ்சல் முகவரியை தங்கள் வைப்புத்தொகை பங்கேற்பாளர்களுடன் பதிவு செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். 2025––26 நிதியாண்டிற்கான வருடாந்திர பொதுக் கூட்ட அறிவிப்பு மற்றும் வருடாந்திர அறிக்கையை அணுகுவதற்கான இணைய இணைப்பை வழங்கும் கடிதம், தங்கள் மின்னஞ்சல் முகவரியை RTA/ DP–களில் பதிவு செய்யாத உறுப்பினர்களுக்கு அனுப்பப்பட்டு உள்ளது. மேலும், அறிவிப்பு மற்றும் வருடாந்திர அறிக்கையின் காகித நகல் குறிப்பாகக் கோரும் உறுப்பினர்களுக்கு அனுப்பப்படும். உறுப்பினர்கள் தங்கள் ஃபோலியோ/டிமேட் கணக்கு விவரங்களை முறையாக மேற்கோள் காட்டி நிறுவனத்திற்கு எழுதுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். டீமேட்/காகித வடிவத்தில் பங்குகளை வைத்திருக்கும் உறுப்பினர்கள் மற்றும் இன்னும் தங்கள் மின்னஞ்சல் முகவரியைப் பதிவு செய்யாத அல்லது புதுப்பிக்காத உறுப்பினர்கள் தங்கள் மின்னஞ்சல் முகவரியை முறையே தங்கள் DP–க்கள்/RTAவில் பதிவு செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். வருடாந்திர பொதுக் கூட்ட அறிவிப்பு மற்றும் வருடாந்திர அறிக்கை ஆகியவை நிறுவனத்தின் இணையதளமான www.fivestargroup.in மற்றும் நேஷனல் செக்யூரிட்டீஸ் டெபாசிட்டரி லிமிடெட்டின் (NSDL) http://www.evoting.nsdl.com, ஸ்டாக் எக்சேஞ்ச் இணையதளங்களான BSE லிமிடெட்டின் www.bseindia.com மற்றும் நேஷனல் ஸ்டாக் எக்சேஞ்ச் ஆப் இந்தியா லிமிடெட்டின் www.nseindia.com ஆகியவற்றில் கிடைக்கும் என்பதை பங்குதாரர்கள் கவனத்தில் கொள்ளவும்.

நிறுவனங்கள் சட்டம், 2013–ன் பிரிவு 108 மற்றும் நிறுவனங்களின் (மேலாண்மை மற்றும் நிர்வாகம்), விதிகள், 2014–ன் விதி 20 அவ்வப்போது திருத்தப்பட்டது மற்றும் செபியின் (பட்டியல் கடமைகள் மற்றும் வெளியீட்டு தேவைகள்) விதிகள், 2015–ன் விதி 44 ஆகியவற்றுக்கு இணங்க, NSDL வழங்கிய மின்னணு வாக்குப்பதிவு முறையை (e–voting) பயன்படுத்தி நிறுவனத்தின் வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து தீர்மானங்களிலும் உறுப்பினர்கள் வாக்களிக்க வசதி செய்யப்பட்டுள்ளது மற்றும் உறுப்பினர்களின் வாக்களிக்கும் உரிமை **ஆகஸ்ட் 24, 2026 திங்கட்கிழமை அன்ற (“கட்–ஆஃப் தேதி”)** அவர்கள் வைத்திருக்கும் சம பங்குகளின் விகிதத்தில் இருக்கும். உறுப்பினர் பதிவேட்டிலோ அல்லது டெபாசிட்டரிகளால் பராமரிக்கப்படும் நன்மை பயக்கும் உரிமையாளர்களின் பதிவேட்டிலோ, கட்–ஆஃப் தேதியில் பெயர் பதிவு செய்யப்பட்டுள்ள நபர் மட்டுமே, தொலைதூர மின்–னணு–வாக்களிப்பு மற்றும் பொதுக் கூட்டத்தில் வாக்களிக்கும் வசதியைப் பெற தகுதியுடையவர்.

- ★ மெசர்ஸ் எஸ் சந்தீப் & அசோசியேட்ஸ் நிறுவனத்தின் நிர்வாகப் பங்குதாரரான திரு எஸ் சந்தீப்பை, நிறுவனச் செயலர்கள் (உறுப்பினர் எண். 5853 மற்றும் சிஓபி எண். 5387) அவர்களை நியாயமான மற்றும் வெளிப்படையான முறையில் வாக்களிக்கும் செயல்முறையை (மின்னணு வாக்குப்பதிவு மற்றும் வாக்கெடுப்பு) நடத்துவதற்காக ஆய்வு செய்பவராக நிறுவனம் நியமித்துள்ளது மற்றும் வருடாந்திர பொதுக் கூட்டம் முடிவடைந்த இரண்டு வேலை நாட்களுக்குள் மின்னணு வாக்குப்பதிவின் முடிவுகள் அறிவிக்கப்படும் என்பதை உறுப்பினர்கள் தயவுசெய்து கவனத்தில் கொள்ளவும்.
- ★ தொலைதூர மின்னணு–வாக்களிப்பு **வெள்ளிக்கிழமை, ஆகஸ்ட் 28, 2026 அன்று காலை 9.00 மணிக்கு (இந்திய நேரப்படி) துவங்கி ஞாயிற்றுக்கிழமை ஆகஸ்ட் 30, 2026 மாலை 5.00 மணிக்கு (இந்திய நேரப்படி)** முடிவடைகிறது. இந்த காலகட்டத்தில், உறுப்பினர்கள் மின்னணு முறையில் வாக்களிக்கலாம். தொலைதூர மின்னணு–– வாக்களிப்பு தொகுதி அதன் பிறகு NSDL ஆல் முடக்கப்படும்.
- ★ VC/OAVM வசதி மூலம் வருடாந்திர பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்டு, தொலைதூர மின்னணு– வாக்களிப்பு மூலம் தீர்மானத்தின் மீது வாக்களிக்காத உறுப்பினர்கள், வருடாந்திர பொதுக்கூட்ட காலத்தில் தொலைதூர மின்னணு–வாக்களிப்பு முறை மூலம் வாக்களிக்கத் தகுதி பெறுவார்கள்.
- ★ வருடாந்திர பொதுக்கூட்டத்துக்கு முன்னதாக தொலைதூர மின்னணு––வாக்களிப்பு மூலம் வாக்களித்த உறுப்பினர்கள் VC/OAVM மூலம் வருடாந்திர பொதுக்கூட்டத்தில் கலந்து கொள்ளலாம்/பங்கேற்கலாம். ஆனால் மீண்டும் வாக்களிக்க உரிமை பெற மாட்டார்கள். ஒரு தீர்மானத்தின் மீது உறுப்பினர் ஒருமுறை வாக்களித்த பிறகு, உறுப்பினர் அதைத் தொடர்ந்து மாற்ற முடியாது.
- ★ அறிவிப்பை அனுப்பிய பிறகு, நிறுவனத்தின் பங்குகளைப் பெற்று, நிறுவனத்தின் உறுப்பினராகி, கட்–ஆஃப் தேதியில் பங்குகளை வைத்திருக்கும் எந்தவொரு நபரும், evotings@nsdl.co.in–ல் கோரிக்கையை அனுப்புவதன் மூலம் தொலைதூர மின்னணு––வாக்கிற்கான உள்நுழைவு– ஐடி மற்றும் கடவுச்சொல்லைப் பெறலாம்.
- ★ தொலைதூர மின்னணு––வாக்களிப்பு, VC வசதி மூலம் வருடாந்திர பொதுக்கூட்டத்தில் பங்கேற்பது, வருடாந்திர பொதுக்கூட்டத்திற்கு முன் கேள்விகளை சமர்ப்பித்தல், வருடாந்திர பொதுக்கூட்டத்தில் பேச்சாளராக பதிவு செய்தல் மற்றும் வருடாந்திர பொதுக்கூட்டத்தில் மின்னணு–வாக்களிப்பு ஆகியவை குறித்த விரிவான வழிமுறைகளுக்கு உறுப்பினர்கள் வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பைப் பார்க்கலாம்.
- ★ மின்னணு வாக்குப்பதிவுக்கான பயனர் கையேடு https://www.evoting.nsdl.com/ இணையதளத்தின் பதிவிறக்கப் பிரிவில் கிடைக்கிறது. மின்னணு வாக்களிப்பு / காணொளிக் காட்சி மூலம் கூட்டத்தில் பங்கேற்பது மற்றும் கலந்துகொள்வது தொடர்பாக ஏதேனும் கேள்வி, தெளிவுபடுத்தல்(கள்) மற்றும்/அல்லது குறை(கள்) இருந்தால், அது குறித்து உறுப்பினர்கள் திருமதி. பல்லவி மத்ரே, மூத்த மேலாளர், என்எஸ்டிஎல், 4வது தளம், டிரேட் வோர்ல்டு, ஏ விங், கமலா மில்ஸ் காம்பவுண்ட், சேனாபதி பாபட் மார்க், லோயர் பரேல், மும்பை – 400013, மின்னஞ்சல் முகவரி: evoting@nsdl.co.in–ல் தொடர்பு கொள்ளலாம் அல்லது 022–4886 7000 மற்றும் 022–2499 7000 என்ற எண்களில் அழைக்கலாம்.

ஃபைவ்–ஸ்டார் பிசினஸ் ஃபைனான்ஸ் லிமிடெட்
ஒப்பம்/–
விக்னேஷ்குமார் செ.மோ.
நிறுவன செயலாளர்

தேதி: ஆகஸ்ட் 06, 2026
இடம்: சென்னை

Karur Vysya Bank
Smart way to bank

பதிவு அலுவலகம்: எண்.20, வடிவேல் நகர்,
L N S அஞ்சல், ஈரோடு ரோடு, கரூர் - 639002
மேடவாக்கம் கிளை: புதிய எண்.5/537, பழைய எண்.204,
(IOC பெட்ரோல் பங்க் அருகில், வேளச்சேரி-தாம்பரம் மெயின் ரோடு, மேடவாக்கம்,
சென்னை-600 100

லாக்கர் வைத்திருப்பவருக்கான அறிவிப்பு

லாக்கரின் வாடகையை செலுத்துவதில் தவறியவர்கள்

பாதுகாப்பான வைப்பு லாக்கர் உடைத்து திறத்தல் பொது அறிவிப்பு.

பின்வரும் நபர் **கரூர் வைஸ்யா பேங்க் லிமிடெட்-ன், மேடவாக்கம் கிளையில்,** பாதுகாப்பு பெட்டக வசதியைப் பயன்படுத்தி வருகிறார்கள். கரூர் வைஸ்யா பேங்க் லிமிடெட், வாடிக்கையாளர்களுக்கு பலமுறை அறிவிப்பு அனுப்பியும் குறிப்பிட்ட காலத்திற்குள் அவர்களால் பாதுகாப்பு லாக்கரை புதுப்பிக்க முடியவில்லை. எனவே லாக்கரை வாடகைக்கு எடுத்தவர் லாக்கர் வாடகையை செலுத்த தவறியதால் **12.08.2026** (ஆகஸ்ட் 12) **அன்று சம்மந்தப்பட்ட கிளை அலுவலகத்தில் மாலை 04.00 மணிக்கு** லாக்கரை உடைத்து திறக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளோம். இந்த பொது அறிவிப்பானது லாக்கர் வாடகைக்கு எடுத்தவர் / அவரின் சட்டபடியான வாரிசுதாரர்களுக்கும் பொருந்தும். லாக்கர் உடைப்பு தேதியை எந்தவித முன்னறிவிப்பும் இன்றி மாற்றவோ, ஒத்திப்போடவோ கரூர் வைஸ்யா பேங்க் லிமிடெட்-க்கு முழு அதிகாரம் உள்ளது.

லாக்கர் வைத்திருப்பவரின் பெயர்	லாக்கர் எண்	நிலுவைத்தொகை
தேவ் பிரேம்நாத் விக்டோரியன்	1610001B026	₹ 5,664/-

இடம் : சென்னை
தேதி : 07.08.2026

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
தி கரூர் வைஸ்யா பேங்க் லிமிடெட்

---

meenakshi (india) limited

மீனாட்சி இந்தியா லிமிடெட்

CIN : L74300TN1987PLC014678
பதிவு அலுவலகம்: **29/16, வொயிட்ஸ் ரோடு, 4-வது மாடி, ராயப்பேட்டை, சென்னை-600014**
Phone:044-42636795, EMAIL ID: ho.accounts@milgroup.in, www.milgroup.in

பொது அறிவிப்பு

1.பௌதிகப் பத்திரங்களை மாற்றுவதற்கும் மின்னணுமயமாக்குவதற்குமு ஒரு சிறப்புச் சாளரம்

அனைத்து பங்குதாரர்களுக்கும் இதன் மூலம் அறிவிக்கப்படுவது என்னவென்றால், 2026 ஜனவரி 30 தேதியிட்ட SEBI சுற்றறிக்கை எண். HO/38/13/11(2)2026-MIRSD-POD/I/3750/2026-இன் படி, ஒரு சிறப்பு சாளரம் (Special Window) நீட்டிக்கப்பட்டுள்ளது. 2026 பிப்ரவரி 05 முதல் 2027 பிப்ரவரி 04 வரையிலான ஓராண்டு காலத்திற்கு இந்தச் சாளரம் செயல்படும். 2019 ஏப்ரல் 1 என்ற காலக்கெடுவிற்கு முன்னதாகவே சமர்ப்பிக்கப்பட்ட, ஆனால் ஆவணங்கள் அல்லது செயல்முறையில் உள்ள குறைபாடுகள் காரணமாகவோ அல்லது பிற காரணங்களினாலோ நிராகரிக்கப்பட்ட / திரும்ப அனுப்பப்பட்ட / கவனிக்கப் படாமல் விடப்பட்ட, பௌதீகப் பங்குகளின் (Physical shares) பரிமாற்றக் கோரிக்கைகளை மீண்டும் சமர்ப்பிப்பதற்காகவே இந்த சிறப்புச் சாளரம் வழங்கப்பட்டுள்ளது.

2021 மார்ச் 31 (பரிமாற்ற ஆவணங்களை மீண்டும் சமர்ப்பிப்பதற்கான காலக்கெடு) மற்றும் 2026 ஜனவரி 6 ஆகிய முந்தைய காலக்கெடுவைத் தவறவிட்ட முதலீட்டாளர்கள், இந்த வாய்ப்பை பயன்படுத்திக்கொள்ளுமாறு ஊக்குவிக்கப்படுகிறார்கள். இதற்காகத் தேவையான ஆவணங்களை நிறுவனத்தின் பதிவாளர் மற்றும் பரிமாற்ற முகவரான Cameo Corporate Services Ltd, Subramaniam Building, No.1, Club House Road, Chennai-600002, India என்ற முகவரியிலோ அல்லது cameo@cameoindia.com என்ற மின்னஞ்சல் முகவரியிலோ சமர்ப்பிக்கலாம்.

2. KYC-ஐப் புதுப்பித்து, பௌதீகப் பங்குகளை Demat வடிவத்திற்கு மாற்றவும்.

பங்குகளைப் பௌதிக வடிவில் (Physical Form) வைத்திருக்கும் பங்குதாரர்கள், தங்கள் KYC விவரங்களைப் புதுப்பித்து, தங்கள் பௌதிகப் பங்குச் சான்றிதழ்களைப் பௌதிகமற்ற வடிவத்திற்கு (மின்னணு வடிவம்) மாற்றிக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். KYC மற்றும் பரிந்துரை (Nomination) விவரங்களைப் புதுப்பிப்பதற்குத் தேவையான ஆவணங்கள் குறித்த விவரங்கள், நிறுவனத்தின் இணையதளத்தில் https://www.milgroup.in/wp-content/uploads/2026/03/KYC-update-Documents-for-Shareholders.pdf என்ற முகவரியில் கிடைக்கின்றன.

மீனாட்சி (இந்தியா) லிமிடெட்–காக
கஞ்சன் ரதி
நிறுவனச் செயலாளர் மற்றும் இணக்க அதிகாரி

இடம் : சென்னை
தேதி : 07-08-2026

S V GLOBAL MILL LIMITED

CIN: L17100TN2007PLC065226
Registered Office: New No.5/1, Old No.3/1, 6th Cross Street, CIT Colony,
Mylapore, Chennai, -600004. Phone: +91 44 2499 7751 / 52 / 53;
Email: svglobal55@gmail.com Website: www.svgml.com

SPECIAL WINDOW FOR TRANSFER AND DEMATERIALISATION OF PHYSICAL SECURITIES

Pursuant to SEBI Circular No. HO/38/13/11(2)2026-MIRSD-POD/I/3750/2026 dated January 30, 2026, Shareholders are informed that SEBI has provided a special window which will be opened from **February 05, 2026** and remain open upto **February 04, 2027** for transfer and dematerialisation of physical securities. This special window shall also be available for such transfer requests which were submitted earlier and were rejected/returned/not attended to due to deficiency in the documents/process/or otherwise.

The securities transferred, pursuant to this Special Window shall be mandatorily credited only in demat mode to the transferee's demat account and shall be subject to a lock-in for a period of 1 (One) year from the date of registration of transfer. During the said lock-in period, such securities shall not be transferred/lien-marked/pledged. The shares re-lodged for transfer will be processed only in dematerialized form during this window. Eligible shareholders who wish to avail this opportunity are requested to submit their original share certificates, transfer request along with the requisite documents to **Cameo Corporate Services Limited**, Company's Registrar and Share Transfer Agent ("RTA"), Address: Subramanian Building” No.1, Club House Road, Chennai–600 002, Tamilnadu. E-mail:investor@cameoindia.com, Phone: 044 - 4002 0700.

For S V Global Mill Limited
Sd/-
P.S. Ravishankar
Company Secretary & Compliance Officer

Place : Chennai
Date : 07.08.2026

தியாகராயநகர் கூட்டுறவு வங்கி லிமிடெட் X – 75

எண்.5, துரைசாமி சாலை, தி.நகர், சென்னை– 600 017.
தொலைபேசி எண் : 044–2434 1353
வேளச்சேரிக் கிளை – தொலைபேசி எண்: 044–2243 0092
ஆழ்வார் திருநகர் கிளை – தொலைபேசி எண் : 044–2377 3244

பொதுப்பேரவை கூட்ட அறிவிப்பு

தியாகராயநகர் கூட்டுறவு வங்கியின் 99ஆவது பொது பேரவைக் கூட்டம் கீழ்க்கண்ட பொருள்களை விவாதித்து தீர்மானிக்கும் பொருட்டு 2026 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 18 ஆம் தேதி செவ்வாய்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் தியாகராயநகர் கூட்டுறவு வங்கி, எண்.5, துரைசாமி சாலை, தியாகராயநகர், சென்னை – 600 017 என்ற முகவரியில் நடைபெறும். அவ்வமயம் வங்கியின் உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

கூட்டப் பொருட்கள்

1. வங்கியின் புதிய உறுப்பினர்கள் சேர்க்கை விண்ணப்பங்களை பரிசீலித்து அங்கீகரித்தல்.
2. வங்கியின் 99ஆவது ஆண்டு பொதுப் பேரைவைக் கூட்ட நடவடிக்கைகளைப் பதிவு செய்தல்.
3. 2025–2026ம் ஆண்டின் தணிக்கை செய்யப்பட்ட வரவு செலவு கணக்குகள், ஆஸ்தி பொறுப்பு பட்டியல், நிகர இலாபத் தொகை ரூ.13,51,540.69/– என நிர்ணயம் செய்ததை ஏற்கவும் மற்றும் தணிக்கை சான்றிதழ்களை அங்கீகரித்து ஒப்புதல் பெறுதல்.
4. 2025–26 ம் ஆண்டின் கூடுதலானசெலவினத்தை பின்னேற்பு செய்தல்.
5. 2025–2026ம் ஆண்டின் நிகர இலாபத் தொகை ரூ.13,51,540.69–ஐ கூட்டுறவு சங்கங்களின் சட்டம், விதிகள் மற்றும் வங்கியின் துணைவிதிகளின் படி பிரிக்கப்பட்டுள்ளதை அங்கீகரித்தல்.
6. 2026–2027ஆம் ஆண்டிற்கான உத்தேச வரவு செலவு திருத்திய மதிப்பீடுகளை ஒப்புதல் பெறுதல்.
7. 2027–2028 ஆம் ஆண்டுக்கான உத்தேச வரவு செலவு மதிப்பீடுகளை ஒப்புதல் பெறுதல்.
8. 2026–2027 ஆம் ஆண்டின் வங்கி கணக்குகளை தணிக்கை செய்ய Ms. Balaji & Co பட்டயகணக்கணக்காளர், சென்னை – 600033 அவர்களை சட்டப்பூர்வ தணிக்கையாளராக மறு நியமனத்தை ஒப்புதல் பெறுதல்.
9. பணிநிலைத்திறன் வங்கி பணியாளர் சிறப்பு துணை விதி (Special Bye Law) எண்: 1 திருத்தம் மேற்கொள்வது தொடர்பாக.
10. வங்கியின் துணைவிதி எண் 42, 44(2ன்) கீழ் வழங்கப்படும் சம்பளக் கடனை ரூ.3.00 இலட்சம் வரை வழங்க துணை விதித்திருத்தம் மேற்கொள்வது தொடர்பாக.
11. வங்கியின் 40(23) ன் கீழ் சிறகுகள் கடன் வழங்குவது தொடர்பான துணைவிதி மேற்கொள்வது தொடர்பாக.
12. வங்கியின் துணைப்பதிவாளர் / செயலாட்சியரால் கொண்டுவரப்படும் இதர தீர்மானங்கள்

திரு. K.S. கணேசன்
பொது மேலாளர்

திருமதி. L.K. ஷோபாதேவி, M.Com., ACS.,
துணைப்பதிவாளர் / செயலாட்சியர்

நாள் : 07.08.2026 | இடம்: சென்னை– 600 017